பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

தரமான ✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஆடு சித்திரை மீ 24 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 01 (07 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-128

# 2 ஆம் கட்ட பேச்சு புதன் ஆரம்பம்?

## அமைச்சர்கள் கலந்து கொள்வர்

கொழும்பு, மே 7

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான முதலாவது கட்டப் பேச்சுக்கள் முற்றுப்பெற்றுள்ளன. அடுத்த இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் அமைச்சர்கள் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சுக்கள் அனேகமாக எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகும் என்று நம்பப்படுகிறது.

இதுவரை நடைபெற்ற பேச்சுக்கள் வெற்றியை அளித்துள்ளன என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மூன்ருவது கட்டப் பேச்சிலேயே ஜனதிபதி கலந்து கொள்வார் என்று தெரிகிறது.

மூன்ருவது கட்டப்பேச்சின் போது விடுதலைப் புலிகள் சார்பிலும் சில உயர்மட்டத் தலைவர்கள் கலந்து கொள்ளலாம் என்று நம்பப்படுகிறது.

## கிளிநொச்சிக்கு புதிதாக 15 பட்டதாரி ஆசிரியர்கள்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி கல்வி மாவட்டத்திற்கு 15 பட்டதாரி ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 6 பேர் உள்வாரி பட்டதாரிகள் ஆவர்.

ஏனைய 9 ஆசிரியர்களும் வெளிவாரிப் பட்டதாரிகள் ஆவர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திஞல் வழங்கப்பட்டுள்ளன.

இதே வேளை 19 ஆசிரியர்களுக்கு உள்ளூர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கடந்த மாதம் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலர் தங்கள் இடமாற்றத்தைப் புறக்கணித்து பழைய பாடசாலைகளிலேயே கடமைபுரிகின்றுர்கள்.

இதனுல் கிளிநொச்சியில் ஆசிரியர் பற்ருக்குறை ஓரளவு நிவர்த்திசெய்யப்பட்டுள்ளது. (ஒ-76)

## புலோப்பளை பகுதி மக்கள் இரவில் ஆலயங்களில் தஞ்சம்

பச்சிலைப்பள்ளி மே7

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை)மாலை ஆறு மணியளவில்புலோப்பளைப் பகுதியில் குண்டுவெடிப்பும் ஷெல்தாக்குதலும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டன.

இதனைத்தொடர்ந்து ரோந்துச் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினரால் வேம்போடுகேணியிலும் அல்லிப்பளைப் பகுதியிலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவங்களை அடுத்து ஏற்பட்ட பதற்றத்திஞல் இப் பகுதிகளிலுள்ள மக்கள் தத்தமது வீடுகளிலிருந்து வெளியேறி கோவில்களிலும்' தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அன்றைய இரவு முழுவதும் பீதியுடனேயே கழிந்ததாக அவர்கள் தெரிவித்தனர் கடந்த வியாழக்கிழமை புலோப்பளையில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக சி. சிவகலா (வயது 22) என்பவருக்கு கையில் முறிவு ஏற்பட்டதால் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார். மற்றும் சி. டயாதேவி(வயது 18). எஸ். யோகேஸ்வரி(வயது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலிலும் நேற்று அரச பஸ் தீக்கிரையானது

யாழ்ப்பாணம், மே 7

காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் சந்திக்குச் சமீபமாக (இந்துக் கல்லூரிக்கு முன்பாக) நேற்றும் அரச பஸ் ஒன்று திக்கிரையானது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அண்மையில் இந்திய அரசிஞல் வழங்கப்பட்ட ''குட்டி'' பஸ் ஒன்றே தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த பஸ் குரும்பசிட்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் சேவையில் ஈடுபட்டு வந்தது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இளைஞர்கள் சிலர் பஸ்ஸை வழி மறித்து பெற்ருேல் ஊற்றி தீயிட்டு கொளுத்தினராம்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் வீதியில் சென்ற சிலரை தாக்கியதாகவும் சொல்லப்பட்டது. [ஒ-9]

## கல்வியங்காட்டுச் சந்தியில் ஆணும் பெண்ணும் கொலை

நேற்றுக்காலை சுமார் 11. 30 மணியளவில் கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமாஞர்கள்.

கொலையுண்டவர்களில் ஒருவர் ஆண், மற்றவர் பெண்.

இந்த இருவரும் கல்வியங்காட்டுச் சந்தையில் வியாபாரம் செய்து வந்தவர்களாவர்.

இறந்தவர்களில் ஒருவர் கே. யோகராஜா (வயது 35) நல்லூர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொலையுண்ட பெண் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

இந்த மரணங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உரிமை கோரியுள்ளனர். (ஒ-9)

## தமிழ்த்தின விழா நாளை கொழும்பில் நடைபெறும்

கொழும்பு, மே 7

தமிழ்த்தின விழா நாளை 8ஆம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெறும்.

கல்விஅமைச்சுடன்இணைந்து இந்துசமய விவகார அமைச்சு இவ்விழாவை நடத்துகிறது.

இந்துசமய விவகார துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் தலைமை வகிக்கிருர். பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் திரு. லொக்கு பண்டார கலந்துகொள்கிருர் (ஒ-எ)

## யாழ். அரச அதிபரின் தகனக் கிரியைகள் நேற்று

யாழ்ப்பாணம், மே 7

யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்தின் தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

இறுதிக்கிரியைகளில் பெரும் எண்ணிக்கையாஞேர் கலந்து கொண்டனர். மதகுருமார்கள், அரச ஊழியர்கள், பிரமுகர்கள் மற்றும் அபிமானிகள் பலரும் அவர்களில் அடங்குவர்.

அன்னரது இல்லத்தில் நடைபெற்ற சமயக் கிரியைகள் காலை 9 மணியளவில் நடந்து முடிந்ததையடுத்து அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

கூட்டத்தில் பல அரச அதிகாரிகள், பிரமுகர்கள், மதகுருமார்கள் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்திஞர்கள்.

பூதவுடல் ஆனைக்கோட்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய கைதிகளைத் தேடி வன்னிப் பகுதியில் சுற்றிவளைப்பு

### செட்டிகுளத்திலும் தாக்குதல் முயற்சி

— வவுனியா மாவட்டச் செய்தியாளர் —

வவுனியா, மே 7

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை. இராசேந்திரன் குளம் பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, திங்கள் (1-5-89) இரவு காவலிலிருந்து தப்பியோடிய கைதிகள் தேடப்பட்டனர்.

இத் தேடுதலின் போது இருபகுதியினருக்கிடையே மோதல் இடம் பெற்றதாகத் தெரியவந்துள்ளது. சேத விவரங்கள் குறித்து தகவல்கள் எதுவும் செய்தி எழுதப்பட்ட போது கிடைக்கவில்லை.

இதேவேளை வெள்ளியன்று வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியைச் சுற்றிவளைத்த இந்திய அமைதிப் படையினர் வீதிகளில் போய் வந்தவர்களையும், வீடுகளில் இருந்தவர்களையும், மறித்து சோதனையிட்டுத் தடுத்து வைத்தனர். சிலர் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

கடந்த திங்களன்று (1-5-89) கைதிகள் தப்பியோடியமை, வியாழன் இரவு இந்த முகாம், காவல் அரண் மீதான தாக்குதல் முயற்சி ஆகியவற்றின் எதிரொலியாகவே இந்த தேடுதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் நகரின் மன்னுர் வீதி தடை முகாம்கள், முகாம் பகுதிகளில் தொடர்ச்சியான வேட்டுச் சத்தங்கள் கேட்டன. எனினும்

[6ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

07—05—1989
சித்திரை — 24
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்;
08.55 முதல் 10.25 வரை
ராகுகாலம்;
04.25 முதல் 05.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
றமழான் பெருநாள்

### உள்ளூர் சேவையில் பழைய பஸ்கள்

யாழ்ப்பாணம், மே 7

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையிஞல் நடத்தப்படும் உள்ளூர் சேவைகளுக்கு புதிய பஸ்கள் எதுவும் நேற்றுப் பயன்படுத்தப்படவில்லை.

கடந்த வெள்ளியன்று பிரஸ்தாப சாலைக்குச் சொந்தமான சொகுசு பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்து உள்ளூர் சேவையில் பழைய பஸ்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நேற்று கொழும்பு வவுனியா போன்ற தூர இடங்களுக்கு மட்டுமே புதிய ரக பஸ்கள் சேவையாற்றின. (ஒ-9)

### சீனி திடீர் விலையேற்றம்

யாழ்ப்பாணம், மே 7

சீனியின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் பாவனையாளர்கள் கஷ்டப்படுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கக் கடைகளில் ஒரு கிலோ சீனி 21 ரூபா 50 சதத்துக்கும், வெளியார் கடைகளில் 23 ரூபாவுக்கும் விற்பனையாகிறது. [ஒ-3]

## முஸ்லிம் மக்களுக்கு முதலமைச்சர் வாழ்த்து

யாழ்ப்பாணம், மே 7

புனித றமழானைக் கொண்டாடும் முஸ்லிம் மக்களுக்கு குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களுக்கு எனது பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிக் கூறியிருக்கிருர் வடக்கு - கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு. அ. வரதராஜப் பெருமாள்.

புனித றமழான் பெருநாளையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

''சில தீய சக்திகளிஞல் தமிழ்-முஸ்லிம் மக்களிடையேயான ஐக்கிய உணர்வுகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனை இனங்கண்டு தொன்று தொட்டு தமிழ் மக்களாகிய எம்மிடையே இருந்துவரும் ஒற்றுமை,

[6ஆம் பக்கம் பார்க்க]

### சிமெந்து விலை உயரும்?

சிமெந்தின் விலை அனேகமாக நாளை திங்கட்கிழமை தொடக்கம் உயர்த்தப்படலாம் என்று அறியவருகிறது.

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை, புத்தளம், ருகுணு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிமெந்து வகைகளின் விலைகளும், லங்கா சிமெந்து லிமிட்டெட் உற்பத்தி செய்யும் சிமெந்தின் விலையும் உயர்த்தப்படும் என்று தெரியவந்துள்ளது.

## தெற்கு பல்கலைக்கழகங்கள் புதனன்று திறக்கப்படும்

கொழும்பு, மே 7

தென்பகுதிப் பல்கலைக்கழகங்கள் வருகிற 10 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கின்றது.

விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் 9 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன் பல்கலைக்கழக விடுதிகளுக்குச் செல்லவேண்டும்என்றுகோரப்பட்டுள்ளது. (ஒ-எ)

## அமைதிப்படை அணி ஒன்று திரும்புகிறது

கொழும்பு, மே 7

இந்திய அமைதிப்படையின் ஓர் அணி (பட்டாலியன்) நேற்று திருகோணமலையில் இருந்து தாயகம் புறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த அணி கப்பல் மூலம் இன்று சென்னைத் துறைமுகம் போய்ச் சேரும்போது அங்கு கலைநிகழ்ச்சிகள் சகிதம் துருப்பினர் வரவேற்கப்படுவர்.

சமீப காலத்தில் இந்தியா திரும்பும் மூன்ருவது அணி இது என்று கூறப்பட்டது.

இராணுவ அணி ஒன்றில் 3,000 முதல் 4,000 துருப்புக்கள் இருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கொழும்புப் பேச்சு குறித்து சிங் ராவிடம் தகவல்

புதுடில்லி, மே 7

வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவை வெளியுறவுச் செயலாளர் எஸ். கே. சிங் நேற்றுச் சந்தித்து தனது இலங்கைப் பயணத்தின் பெறுபேறுகளை விவரித்தார்.

இதனிடையில்- இலங்கை அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேரடிப் பேச்சுக்களை நடத்த முன்வந்ததற்கு இந்திய இராணுவமும் ஒரு காரணம் என்று இந்திய வெளியுறவுத்துறை கூறியிருப்பதாக ஏஜன்சிச் செய்தி ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

அமைதிப்படை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக எடுத்துக் கொண்ட கடும் நடவடிக்கையே விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த சம்மதிக்க வைத்திருக்கக் கூடும் என்று இந்திய வெளியுறவுத்துறைச் செய்தியாளர் ஒருவர் கூறினர். (ஒ-எ)

## வவுனியாப் பகுதியில் அரிசி ஆலைகளில் கொள்ளை

வவுனியா, மே 7

வவுனியா சின்னப் புதுக்குளம் பகுதியில்உள்ள இரண்டு அரிசி ஆலைகளினுள் புகுந்த ஆயுதக் கோஷ்டியினர் அங்கிருந்தோரைப் பயமுறுத்தி 21 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

ஒரு அரிசிஆலையில் ஆருயிரம் ரூபாவும் மற்ற ஆலையில் 15 ஆயிரம் ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இளைஞர் சடலம்

இதேவேளையில், இறம்பைக்குளம் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டு, பொலிஸாரிஞல் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் யார் என்பது உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. (ஒ-164)

### முச்சந்தி முரளி



என்ன சாமான்களின்ரை விலையள் அடுத்தடுத்து ஏறிக் கொண்டிருக்குது......?

### மாத்தளையில் நிலக்கண்ணி

மாத்தளையில் நேற்று இடம்பெற்ற நிலக்கண்ணித் தாக்குதலின்போது இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்த 5 இராணுவத்தினரும் சிவிலியனை சாரதி ஒருவரும் காயம் அடைந்தனர். [இ-உ]

## செய்திச் சாரம்

### எம். பி. மீது சூடு!

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த யு. என். பி. எம். பியான பியசோம உபாலி மீது நேற்று இனந்தெரியாத 6 நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

குளியாப்பிட்டியில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து இச்சம்பவம் இடம்பெற்றது.

அவர் காயங்களின்றி தப்பிஞர். ஆஞல் அவரது பாதுகாப்பு அதிகாரிகள் காயம் அடைந்தனர். [ஒ-எ]

### மோட்டார் சைக்கிளும் தீக்கிரை

பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்குச் சமீபமாக மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றுத் தீக்கிரையானது.

பிரஸ்தாப இடத்தில் நடந்த ஒரு விபத்தை அடுத்து மோட்டார் சைக்கிள்கைவிடப்பட்டிருந்ததாகவும் அதற்குப் பின்னர் தீயிடப்பட்டதாகவும் அறியவந்தது. (ஒ)

### அதிபர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 7

பாணந்துறை ரேயல் கல்லூரி அதிபரான திரு. குலசிரி மென்டிஸ் என்பவர் இனந்தெரியாதோரால் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது வீட்டில் இருந்த 2 துப்பாக்கிகளும் அப்போது கொள்ளையடிக்கப்பட்டன. [ஒ-எ]

### முன்ஞள் தூதரின் புதல்வர் கொலை

கொழும்பு, மே 7

கடந்த வியாழக்கிழமை கண்டி அம்பிட்டியாவில் திரு. எஸலா ரணசிங்கா என்பவர் இனந்தெரியாதவர்களிஞல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பங்களாதேஷில் இலங்கைத் தூதராகப் பணியாற்றிய பின்னர் காலமான திரு. சரித்தா ரணசிங்காவின் புதல்வர் இவர். (ஒ-எ]

### மீசாலையில் ஜவான் மீது சூடு

மீசாலை ரயில் நிலையத்தில் காவல் கடமையில் நின்ற அமைதிப்படை ஜவான் ஒருவர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் படுகாயமடைந்ததாக அறிய வந்தது.

நேற்று நண்பகல் 12 மணி

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடை விறாக்கைகள், Singer தையல் மெஷின், T.V, Fan. Cot, T.V Sand, Bicycle மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 843, பருத்தித்துறை ரோட், அரசடி, நல்லூர். (10805)

நல்ல நிலையிலுள்ள புதிய மொடல் MD 90 (சிவப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முருகன்ஸ்ரோர்ஸ் ஆடியபாதம் வீதி, கொக்குவில். (364)

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Un-registered Chaly (Plastic/Steel) C 90 மோட்டார் சைக்கிள்சள் விற்பனைக்கு உண்டு. Our Lady Stores, 601, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [377]

கைதடியில் மானிப்பாய் வீதிக்கு வடக்குப் பக்கத்தில் தோட்டமும், வெறும் நிலமும் அடங்கிய 13½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா. செல்வரத்தினம், 490, கே.கே.எஸ் வீதி, வண்ணார்பண்ணை. [376]

நல்ல பாவிப்பிலுள்ள FY சோமசெற் கார் விற்பனைக்கு உண்டு. கொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (374)

### வான் விற்பனைக்கு

30 சிறி தொடர் இலக்கம் உடைய ELF 250 வான் உடனே விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. செரமிக் சேல்ஸ் சென்ரர், 116, K.K.S ரோட், சுன்னாகம். (பழைய பொலீஸ் நிலையம் முன்பாக) [C 2502]

### மலிவு விற்பனை

இன்னும் சொற்ப அளவே கையிருப்பில் உண்டு. பொலிஸ்டர் 1 மீட்டர் 25/- ஜோஜட் 25/- சேட்டிங் 25/- சட்டைகள் 25 முதல் 50 வரை. ஞாயிறு விற்பனை உண்டு. அங்கலின் க மன்ஸ் மேல்மாடியில் 24/1, பெரியகடை [மலாயன் கபே அருகில்), யாழ்ப்பாணம். (375)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

[DEKALB பிறவுண் சேவல் குஞ்சு 50 க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3-50 சிறு அட்வான்ஸ் கட்டி பதிவு செய்யலாம். இல 9, கந்தையா லேன் சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10820]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் 9ஆம்திகதி செவ்வாயும், Golden Comet பிறவுண் பேடு சேவற் குஞ்சுகள் 10ஆம் திகதி புதனும், Hybro புரொயிலர் குஞ்சுகள் Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், 11ஆம்திகதி வியாழனும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (371)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர்க் குஞ்சுகள் [9- 5- 89] செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியேபதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10775]

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hy - line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2518]

### தேவை

வீடியோ படப்பிடிப்பில் நன்கு அனுபவம் உள்ளவர்களுடன் இணைந்து தொழில் புரியவும் தொழில் பழக விரும்புபவர்களும் தேவை. தொடர்பு: விக்ரேஸ், இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (373)

பெண் உதவியாளர் தேவை. தட்டச்சு வேலை தெரிந்தவர் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும். சிவா (படப்பிடிப்பாளர் பகவான் ஸ்ருடியோ) 95, யாழ் வீதி, மானிப்பாய். (366)

எமது ஸ்தாபனத்திற்கு Electronic [இலத்திரனியவில்] வேலையில் அனுபவம் உள்ளவர்கள், வேலை பழகுபவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். S. V. N. Electronic, [Work Shop],116, P. W. D. Road, Mullaitivu. [356]

எலெக்றிக்கல் குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தும் வேலை பழக ஆர்வமுள்ளவர்கள் தேவை. ஸ்பிறே பெயின்ரிங் வேலை ஓரளவு தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. வேலை நேரம் காலை 8 00 தொடக்கம் 6.00 மணி, நேரில் வரவும். 'OMEGA' [ஈழநாட்டிற்கு எதிரில்] யாழ்ப்பாணம் [378]

உருக்கு தளபாட அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை. (Steel Cupboard Tables Chairs eto 9.5.89 காலை 9 மணிக்கு நேரில் வரவும். ஜெனுட்ரெடெஸ், K.K.S. ரோட், இணுவில். (C/2517)

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் உயர்குல திருமண மாகாத கன்னிப் பெண் வயது 35 B. A, Dip- in Ed. ஆசிரியைக்கு தகுந்த வரன் தேவை. சாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 507, C/o, உதயன். (368)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவாகரத்து செய்து கொண்ட 53 வயது பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள்தேவை. பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியையாய் இருக்க வேண்டும். விவாகரத்து செய்து கொண்ட அல்லது விதவைகளும் விண்ணப்பிக்கலாம். வயது 42—44க்கும் இடைப்பட்டதாக இருக்கவேண்டும். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 54, C/o உதயன். [10781]

### மணமகள் தேவை

கரையார் இந்துஇனத்தைச் சேர்ந்த [47] வயதுடைய 3 ஆண் பிள்ளைகளின் தகப்பனுக்கு மணமகள் தேவை. பொறுப்பற்ற விதவைகளும் விண்ணப்பிக்கலாம். சாப்பாட்டுக் கடை மூலம் மாதம் 3000/- வருமானம் உடையவர். சீதனம் விரும்பியபடி ஏற்றுக் கொள்ளப்படும். இல. 57, மே / பா உதயன், யாழ்ப்பாணம். (10835)

### FOR SALE

Pyramid, V. G. P. Thomsun, Esquir, Orinal Video கசட்டுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விலியா வீடியோ கிளப், நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. [363]

### FOR SALE

சொந்தப் பாவிப்பிலுள்ள மொறிஸ் மரின Morris Marina கார் (1967 year Model] with A/C one Owner, விற்பனைக்கு உண்டு. 7 SRI தொடரிலக்கம். 45, புதிய சிவன் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். [10841]

### ஆங்கிலம்

ஆங்கிலம் ஆரம்பத்தில் இருந்து O/L 89, A/L வகுப்புகள் Spoken Business English. Personal Classes தினசரி காலை, மாலை. கனகசபை 8, 6 ஆம் ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (290)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி, சேவல், குப் குஞ்சு, விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பரப் பலகை உண்டு. Nallur Farm Centre, 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/2519)

### சேவை

தட்டச்சு ரோணியோ வேலைகள் மிகத் தெளிவாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும். Teens Copy, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2317)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: கனகசபை தர்மகுலசிங்கம், ''கணேஸ் வாசா'' வாரிவளவு, காரைநகர் C/o, சித்திதங்கமாளிகை, 213C கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். [257]

### வகுப்புக்கள்

Typing - Short Hand வகுப்புக்கள். வாரநாட்களிலும் வார இறுதி நாட்களிலும் வெவ்வேறாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes, 53A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2316)

### NEW CITY TRADERS

Dayton T. V 12'' 14'' B & W 14'' 20'' கலர் Phillips 20'' Gas Cooker, Hotplate Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [2505]

## கொம்பியூட்டர் பயிற்சி

மல்லாகத்தில் ஆரம்பமாகிறது.

**Basic Programming Course**

**09 - 05 - 1989**

**(4. 00 p.m)**

INITIAL Fee: Rs. 500/-

**IDP COMPUTER CENTRE**

342, K.K.S. Road, Jaffna.

Branch: 7th Mile Post, Mallagam. (சி/2455)

## கிரேக்க கப்பல்களில் வேலை வாய்ப்புகள் (உடனடியாக)

AB OILFR BOSON FRESHERS (புதியவர்கள்)

மற்றும்: OFFICERS

RADIO OFFICER ELECTRICIAN IInd OFFICER IIIrd ENGINEER

மற்றும்

★ கனடா ★ ஜேர்மன் ★ பிரான்ஸ் ★ இத்தாலி ★ சுவிஸ் ஆகிய நாடுகளுக்கான

- பிரயாண ஒழுங்குகள்
- பாஸ்போர்ட்
- பொன்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

" முற்பணம் அறவிடப்படமாட்டாது "

சந்திக்கும் நேரம்!-
காலை 6.00மணி — 8.30 மணி
மாலை 3.30மணி — 7.00 மணி

**சுஜிதா என்ரபிறைசஸ்**

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. [434]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**தேவசுந்தரி கனகசபை**

தோற்றம்: 05 - 06 - 1925 மறைவு: 07 - 04 - 1989

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட அணையாச் சுடரே! இந்நாளில் அல்ல எந்நாளுமே உங்களை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வருந்தும்:
கணவன், மகன், உடன் பிறப்புக்கள், மருமகள், பேத்தி, உறவினர். நண்பர்கள்.

செல்லத்துரை ஒழுங்கை,
பலாலி ரோட்.
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (10846)

### தவறிவிட்டது

செல்லத்துரை சுமதியின் அடையாள அட்டை இல: 688470226V தவறிவிட்டது எடுத்தவர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [10843]

## வயாவிளான் வீதி

அச்சுவேலி, மே 7

அச்சுவேலி - வயாவிளான் வீதி நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காட்சி அளிக்கின்றது

அச்சுவேலி - வயாவிளான் வீதியில் அச்சுவேலி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையம் வரையுள்ள வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. (க - 11)

## இடமாற்றம்

கொடிகாமம். மே 7

கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. தா. பாலசுப்பிரமணியம் யாழ் அபிவிருத்திச் சபையில் இருந்து சாவகச்சேரி நகர சபை எழுது வினைஞராக இடமாற்றம் பெற்றுள்ளார். [இ - 75]

## ரூபவாஹினியில்

யாழ்ப்பாணம் மே 7

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 30 மணிக்கு ரூபவாஹினி சைவநீதி, நிகழ்ச்சியில் கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகதின சங்காபிஷேகவிழா ஒளிபரப்பாகும். [இ]

## ★ ரெருசோ ★ மூலப்பொருள்கள் விற்பனை

- ✶ வெளிநாட்டு சிப்ஸ்
- ✶ கலர் பவுடர் வகைகள்
- ✶ வெள்ளைச் சிமெந்து
- ✶ மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**★ மாபிள்ஸ் ★**

281-D, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/2362)

## தேவை

அச்சகத்தில் (பெடல்) மெஷின் அடித்துப் பழக விரும்புவோர் [G. C. E.] படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். வவுனியா நகரில் வசிப்பவர்கள் விரும்பத் தகுந்தது.

**வன்னி அச்சகம்,**
கண்டி வீதி,
வவுனியா. (10845)

# உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா

| | வேலைகள் | பேர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | கெவிவெய்கிள் றைவேர்ஸ் | — 05 | 700 SR |
| 02. | ஸ்ரோர் கான்ட்லர் | — 03 | 300 SR |
| 03. | ரோட் மெயின்ரினன்ஸ் ரெக்னிசிசன்ஸ் | — 08 | 600 SR |
| 04. | ஜெனரல் வேக் றைவர் | — 08 | 650 SR |
| 05. | ரோட் மெயின்ரினன்ஸ் லேபறர் | — 100 | 300 SR |
| 06. | கிளீனிங் லேபறர் | — 100 | 300 SR |
| 07. | டிக்கிங் அன் கிறவுண்ட்ஸ் பெசலிஸ்ட் | — 10 | 650 SR |
| 08. | டிக்கிங் லேபறர் | — 100 | 375 SR |
| 09. | பில்டிங் கொன்ஸ்றக்சன் போமன் | — 03 | 850 SR |
| 10. | காப்பென்ரர் | — 15 | 650 SR |
| 11. | காப்பென்ரர் கெல்ப்பர் | — 10 | 350 SR |
| 12. | பேணிச்சர் பெயின்ரர் | — 05 | 600 SR |
| 13. | பேணிச்சர் பெயின்ரர் கெல்ப்பர் | — 10 | 300 SR |
| 14. | எலக்ரிசிசன் [லோவோல்ரேச்] | — 03 | 750 SR |
| 15. | எலக்ரிசிசன் | — 05 | 650 SR |
| 16. | பவர் பிளான்ட் ஒப்பறேற்றர் | — 05 | 700 SR |
| 17. | சிவேச் றீற்மன்ட் பிளான்ட் ஒபரேட்டர் | — 05 | 700 SR |
| 18. | பெஸ்ட் கொன்ரோல்ட் போமன் | — 03 | 800 SR |
| 19. | ,, ,, ரெக்னிசிசன் | — 10 | 600 SR |
| 20. | ,, ,, கெல்ப்பர் | — 10 | 400 SR |
| 21. | போமன் (சிவில் என்ஜினியர்) | — 04 | 1500 SR |
| 22. | ,, (எலக்றிக்கல் என்ஜினியர்) | — 04 | 1500 SR |
| 23. | போமன் (மெக்கானிக்கல் என்ஜினியர்) | — 04 | 2000 SR |
| 24. | போமன் (கொம்மியுனிகேசன் ,, ) | — 04 | 2000 SR |
| 25. | ரைப்பிஸ்ட் | — 05 | 700 SR |
| 26. | ரெலிபோன் ரெக்னீசியன் | — 05 | 850 SR |
| 27. | ரெலிபோன் அன் லைன் இன்ரலேசன் ரெக்னிசியன் | — 03 | 750 SR |
| 28. | ரெலிபோன் ஒப்பறேற்றர் | — 05 | 700 SR |
| 29. | கொம்பியூற்றர் ஒப்பறேற்றர் | — 05 | 800 SR |
| 30. | கிளீனிங் சுப்பவைசர் | — 10 | 700 SR |
| 31. | கிளாஸ் பிற்றர் | — 05 | 750 SR |
| 32. | ஓட்டோ பெயின்ரர் | — 05 | 750 SR |
| 33. | ஓட்டோ எலக்ரிக்கல் ரெக்னீசியன் | — 03 | 700 SR |
| 34. | றேடியேற்றர் ரெக்னீசியன் | — 05 | 700 SR |
| 35. | வீல் பலன்ஸ் ,, ,, | — 05 | 650 SR |
| 36. | ரயர் றிப்பயர் ,, ,, | — 05 | 650 SR |
| 37. | வாணிங் சிஸ்ரம் ஒப்பறேற்றர் | — 05 | 700 SR |
| 38. | றைவர் [Fire Truck] | — 08 | 800 SR |
| 39. | பயர் டிப்பாட்மென்ட் றெக்கோட் கீப்பர் | — 03 | 700 SR |
| 40. | அசிஸ்ரன் ரெக்னீசியன் பயர் புரொட்டெக்சன் Asst. Tech சிஸ்ரம் | — 03 | 600 SR |
| 41. | கிளீனர் [ஏயர் கிறுப்ட்] | — 100 | 300 SR |
| 42. | லேபறேஸ் | — 25 | 350 SR |
| 43. | ஒப்பீஸ் போய் [Office boy] | — 10 | 300 SR |
| 44. | கெவி டியூட்டி றைவர் | — 05 | 750 SR |
| 45. | குக் [Cook] | — 05 | 750 SR |
| 46. | குக் கெல்ப்பர் | — 10 | 400 SR |
| 47. | ரொக்ரர் [Doctor] | — 02 | 2500 SR |
| 48. | மேல் நேஸ் [Male Nurse] | — 04 | 1200 SR |
| 46. | பிளம்பர் | — 05 | 650 SR |
| 50. | பெயின்ரிங் லேபறர் | — 04 | 350 SR |

● நேர்முகப்பரீட்சை 8-5-89 தொடக்கம் 14-5-89 வரை.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**அ. தவச்செல்வம் (B. Sc.Hons)**

ஆசிரியர்
நெல்லியான் வீதி,
சுழிபுரம். [சி-2522]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுல் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றை**

## குத்தகைக்குப் பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்ருண்டுகளுக்கு குத்தகைக்கு வீடு ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தில் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுர மீற்றர்களுக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிடவசதி, பூந்தோட்ட இடவசதி என்பவற்றை உடையனவாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின்போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1989 - 05 - 30 ஆம் தேதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வீட்டை குத்தகைக்கு விடல்" என எழுதப்பட வேண்டும்.

**பதில் பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
03. 05. 1989

(சி/2448)

நித்திய பூஜை செய்வதற்கு

**குருக்கள் தேவை**

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலுக்கு நித்திய பூஜை செய்வற்கு குருக்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

செயலாளர்

(431)

கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி




பீகொக்

கூந்தல் சாயம்

யப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது!
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத் தொடர்புகொள்ளுங்கள்!
விலை ரூபாய் 50/-க்குமேல்
சந்தைப்படுத்துவோர்
சக்தி (பிரைவேட்) லிமிட்டெட்
S.26. 2ம் மாடி, மத்திய கொழும்பு சுப்பர் மார்க்கெட், கொழும்பு:11
Colombo Central Super Market. Colombo: 11
LANKA COMMERCIAL ARTISTS

மாங்குளம், முல்லை மக்கள்வங்கி

# அடகு நகை மீளளிப்பு எப்போது?

## நீண்டகாலம்எதிர்பார்த்துமக்கள் ஏமாற்றம்

மாங்குளம், மே 7
மாங்குளம் முல்லைத்தீவு மக்கள் வங்கிகளில் வைக்கப்பட்ட அடகு நகைகள் தொடர்ந்து மீளளிக்கப்படாத நிலையில் இருந்து வருகின்றன.

அடகு நகைகளை மீட்பதில் மக்கள் ஆர்வம் செலுத்தி பணத்தையும் வட்டியையும் இந்த வங்கிகளில் செலுத்தி வருகின்றனர்.

1984 ஆம் ஆண்டு அடகு நகைகளை மீளப்பெறுவதில் அக்கறை கொண்டு பணத்தைச் செலுத்தியவர்களுக்கும் இதுவரை மக்கள் வங்கி அடகு நகைகளை மீளளிக்கவில்லை.

மற்றைய சில மாவட்டங்களில் அடகு நகைகள் கட்டம் கட்டமாக மீளளிக்கப்பட்டு வருகின்றன. ஆனுல் முல்லைத்தீவு, மாங்குளம் மக்கள் வங்கி அடகு நகைகள் இது வரை மீளளிக்கப்படவில்லை.

(இ-94)

அதிகாரம் வழங்குவதில் உள்ள இழுத்தடிப்பு

## காலம் கடத்தும் போக்கு வளர்வதையே காட்டுகிறது

### ஈ. பி. டி. பி. அறிக்கை

யாழ்ப்பாணம், மே. 7
ஈழ மாநில சபைக்கு அதிகாரங்களை வழங்க இழுத்தடிப்பும் - இழுபறிகளும் தொடர்வது, தமிழ்பேசும் மக்களது ஜீவாதார நலன்களைப் புறக்கணிக்கின்ற— இழுத்தடித்து காலம் கடத்துகின்ற —போக்குகள் வளர்வதையே காட்டுகின்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ.பி.டி.பி.] விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உண்மையிலேயே பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் அக்கறை சிறிலங்கா அரசுக்கு இருக்குமானுல் இப்போதுள்ள வாய்ப்பை தவறவிடக்கூடாது.

ஜனநாயக வழிமுறைகளுக்கு விருப்பம் கொண்டுள்ள தமிழ்பேசும் மக்களது அமைப்புக்களை மீண்டும் ஆயுதப் போராட்டப் பாதைக்கு அனுப்பி வைக்கும் வேலையை அந்த அரசே செய்யும்போல் உள்ளது; அதன் இன்றைய நடவடிக்கைகள்.

கௌரவமான சமாதானத்துக்காக நாங்கள் நிற்கிறோம். இதனை எமது மக்களின் நலன்களை விழுங்கும் வாய்ப்பாகக் கொண்டு சிறிலங்கா அரசு செயற்படுமானுல் பின் விளைவுகளுக்குஅதுதான்முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

### அதிபர் கூட்டம்

சுன்னுகம், மே 7
மருதனுமடம் கோட்டக் கல்விப் பிரிவு மட்டத்திலான அதிபர்களின் கூட்டம் நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் தலைமையில் நடைபெறும்.

(க-27)

## சிறுவருக்கு சீரிய வழிகாட்டுவது நமது மாபெரும் பொறுப்பு

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

சுன்னுகம், மே 7
சிறுவர்களுக்கு சீரிய வழி காட்ட வேண்டியது நமது மாபெரும் பொறுப்பாகும். ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பூரணமாகச் செயற்படுத்த அதிபர்கள் ஒத்தாசையாக, இருக்கவேண்டும்.

யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினுர்.

மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் அதிபர்கள் மத்தியில் பேசும்போது அவர் மேலும்கூறியதாவது:

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழிற் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

சூழலை அவதானிக்கும் திறனை விருத்தி செய்து விஞ்ஞானக் கல்வியை மேம்பாடடையச் செய்யவேண்டும்.

ஆய்வுகூட வசதிகள் செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொத்தணி மட்டத்தில் ஒரு பாடசாலையிலாவது உடற் கல்வி சம்பந்தமான சகல வசதிகளும் அமையத் திட்டம் இடப்படுகிறது.

இப்படி அவர் கூறினுர்.

(க-27)

ஜனசக்தி மூலம்

## மக்கள் தமது வறுமையைத் தாமாகவே ஒழிக்க முடியும்

ஊர்காவற்றுறை, மே 7
விரைவில் அமுல் செய்யப்படவுள்ள ஜனசக்தித் திட்டத்தின் மூலம் கிராமங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான செயல் முறைகளைத் தாங்களாகவே நடைமுறைப்படுத்த வாய்ப்புண்டு. இதை எமது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஜனசக்தி பயிற்சி வகுப்பொன்றில் தொடக்கவுரை நிகழ்த்திய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ்.எஸ். சிவரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உப குழுக்களின் அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

முன்பு எல்லாம் அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்க அதிகாரிகளின் தீர்மானத்தின்படியே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பொதுமக்களுக்கு எதையும் தெரிந்துகொள்ள வாய்ப்புக்கள் இருக்கவில்லை.

சில தேவையற்ற திட்டங்களைக்கூட அதிகாரிகள் தங்கள் சொந்த இலாபத்துக்காக நடைமுறைப்படுத்தும் போது பொதுமக்கள் அதுபற்றி விசனமடையும் சந்தர்ப்பங்களும் இருந்தன.

ஆனுல் தற்போது கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள உப குழுக்கள் மக்களின் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் நேரடியாக அரச அதிகாரிகளுக்கு தெரிவிப்பார்கள்.

அவர்கள் விரும்பித் தீர்மானித்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது அவர்கள் திருப்தியடைகின்ருர்கள். இப்படி அவர் கூறினுர்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். சுந்தரலிங்கம், கிராம சேவையாளர் திரு. கே. சகாதேவன் ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

[ச-16[

## மோட்டார்சைக்கிளுக்கு பாஸ்; ஆனையிறவில் கேட்கப்படுகிறதாம்

தாளையடி, மே 7
ஆனையிறவு தடை முகாமுக்கு ஊடாகச் செல்லும் மோட்டார் சைக்கிள்களுக்கு பாஸ், வாகன அனுமதிப் பத்திரம் என்பன வைத்திருத்தல் வேண்டுமென அமைதிப் படையினரால் வலியுறுத்தப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்களுக்கு 'பாஸ்' தேவையில்லை எனக் கூறி அமைதிப்படையினர் மோட்டார் சைக்கிள்களுக்கு 'பாஸ்' வழங்குவதை நிறுத்தியுள்ளதனை அடுத்து ஆனையிறவு தடைமுகாமிலும் 'பாஸ்' இன்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

தற்போது ஆனையிறவு தடைமுகாமில் 'பாஸ்' மோட்டார் சைக்கிள்களுக்கும் கேட்கப்படுவதை அடுத்து யாழ் குடாநாட்டிலிருந்து செல்பவர்கள் 'பாஸை' எங்கே பெறுவது என்று தெரியாமல் திண்டாடுகிருர்கள்.

அதேசமயம் யாழ் கச்சேரியில் பல காலமாக வாகன அனுமதிப் பத்திரத்தினையும் வருடா வருடம் பெறமுடியாத நிலை உள்ளது.

[ஓ-144]

விஜயலங்கா போட்டோஸ்ரற்
கோப்பாய்.

**வருந்துகிறேம்**

கடந்த சில நாட்களாக தவிர்க்க முடியாத காரணங்களால் எமது போட்டோஸ்ரற் இயங்காததால் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட வசதியீனங்களுக்காக வருந்துகிறேம். மீண்டும் எமது போட்டோஸ்ரற் இயங்க ஆரம்பித்து விட்டமையை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேம்.

★ பிரிட்டிஷ் தயாரிப்பான புத்தம் புதிய "ருங் செரொக்ஸ்" (RANK XEROX) யந்திரமூலம் நவீன போட்டோஸ்ரற் செய்யப்படுகிறது!
★ பிரதிகளை விரும்பிய அளவிலும் கணித விகிதாசார அளவில் பெருப்பித்தும் சிறுப்பித்தும் செய்து கொள்ளலாம்.
★ ஒரேமுறையில் 50 பிரதிகளுக்குமேல் செய்வோருக்குக் கழிவு உண்டு.

குறிப்பு: வழமைபோல நாஷனல் ஈ-180 எஸ். பீ., ரீ. டி. கே-90 ஆகிய வீடியோ, ஓடியோ நாடாக்கள் (Audio, Video Tapes) விற்பனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. T.D.K. 60 சொற்பதொகை மட்டும் உண்டு.

**விஜயலங்கா எக்ஸ்போட்ஸ் அன் கொன்ருக்ஸ்**
பருத்தித்துறை வீதி,
[D. R. O. கந்தோர் முன்றல்]
கோப்பாய்.

[C/2450]

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான

**கம்பியூட்டர் கல்வி**

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 15 - 05 - 1989 (திங்கள், புதன், வெள்ளி)
சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14 - 05 - 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)

(சி/2435)

வெளிவந்துவிட்டது!

வாங்கிவிட்டீர்களா?

★ அர்ச்சுனு ★

**மார்ச் இதழ்**

- குழப்படி மன்னன் ரொம் — தொடர்கதை
- வியக்க வைக்கும் பறக்கும் தட்டு
- அறிவுலக அறிமுகம்
- ஆலைகள் செல்வோம்
- இருதயத் துடிப்புமானி பிறந்த கதை
- ஹட்றிக் ✶ பாலராமாயணம்
- கிரிக்கட் கப்டன் அலன் போடர்
- லப்பாம் — டப்பாம் ✶ கவிதைகள்

இன்னும் பல சுவையான அம்சங்கள்
விலை ரூபா 4/- மட்டுமே.

**சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்**

● உதயன் முகவர்களிடம் பிரதிகள் இடைக்கும்

[சி/2521]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எமது நிறுவனத்திற்கு யாழ். நகரில் 100'—200' ச. அடி பரப்பில் காகிதாதிகள், கண்கவர் பொருட்கள் (Fancy Goods) விற்பனை செய்ய இடம் தேவை. நில அறை (Ground Floor) விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க.

**விஜயலங்கா எக்ஸ்போட்ஸ் அன் கொன்ருக்ஸ் கம்பனி**

த.பெ.இல: 867
கொழும்பு 12
தொலைபேசி: 26322

கிளை:
விஜயலங்கா போட்டோஸ்ரற்
பருத்தித்துறைவீதி,
கோப்பாய்.
D.R.O காரியாலய முன்றல்

(சி/2449)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி**
(மயில்வாகனம்)

மலர்வு.
07-06-1950

உதிர்வு:
07-05-1988

அன்பின் திருவுருவே, அருளின் உறைவிடமே, பண்பின் சிகரமே, நேர்மையின் சின்னமே குடும்பத்தின் ஒளி விளக்கே எங்களைப் பற்றுடன் பேணிக் காத்து உயர் வாழ்வு அளித்த எங்கள் இதயப் பாசமலரே! எங்கள் எல்லோரையும் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு ஒரு கணத்தில் அணைந்து விட்ட எங்கள் அன்புத் செய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டாகிறது. ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அழகிய திருவுருவம் எங்கள் நெஞ்சத்தில் என்றும் அணையாத் தீபமாய் ஒளி வீசும். உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

ஏருவூர் - 4 குறிச்சி.

[10674]

## மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், மே 7

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. த. அழகரத்தினம் போட்டிக்குத் தலைமை வகிப்பார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தியும் சிவநெறிப்புலவர் க. கனகராசாவும் கலந்து கொள்வார்கள்.

## கரபந்தாட்ட வலைபந்தாட்டப் போட்டிகள்

குருநகர், மே 7

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலைய 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரபந்தாட்டப்போட்டி நாலாம் திகதி தொடக்கம் குருநகர் கலையரங்கு முன்பாக நடைபெற்று வருகிறது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டி குருநகர் யாகப்பர் ஆலய வளவில் 9ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

மென்பந்தாட்ட(கிரிக்கெற்) போட்டி குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது (ச-51)

## துப்பாக்கி முனையில் கொள்ளை

வவுனியா, மே 7

கடந்த வியாழக்கிழமை இரவு பண்டாரிகுளத்தில் வீடு ஒன்றினுட் புகுந்த ஆயுதம் தாங்கிய குழு ஒன்று வீட்டாரைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி நகைகள், பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளது.

வீட்டுப் பெண்மணிகள் தாங்கள் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் இக்கொள்ளையின்போது இழக்க நேரிட்டுள்ளது. (ஒ-164)


## EXHIBITION

**Chundikuli Girls' College**

**Dr. E. M. Thilliampalam Vocational Training Institute**

An Exhibition on Needle work, Bridal Bouquets, Iced Cakes, Structure Cakes, Pot Painting, Macrame and Handicraft will be held on 11th, 12th and 13th May 1989 between 9-00 a. m. and 6-00 p.m.

Those who wish to join the above course, which is due to commence shortly for the new batch can also give in their names.

(C/2503) PRINCIPAL.

## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த. உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

**'அறிவொளி'**
**கல்வி வெளியீடு**

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது. கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

அறிவொளி.
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த. பெ. இல. 162.
கொழும்பு.

(308)

## K. K. ELECTRONICS

- வீடியோ படப்பிடிப்புகள்
- வெளிப்புற கலர்ப் படப்பிடிப்புகள்
- புதிய பழைய தமிழ், ஆங்கிலம், ஹிந்தி திரைப்படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்.
- புதிய பழைய திரைப்படப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்

**கே. கே. எலக்ரோனிக்ஸ்,**
**இல. 27, மின்சார நிலைய வீதி,**
**3 வது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

பழையகண்டி,
காரைநகர்.

(2444)


## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
29 - 09 - 1942

மறைவு:
07 - 05 - 1988

**வெற்றிவேற்பிள்ளை யோகேஸ்வரன்**

ஊருக்கு நன்மையாற்றி,
உள்ளத்தில் உண்மையேற்றி,
ஆருக்கும் உதவியாற்றும்,
அன்பனும் ''யோகா'' என்னும்,
பேருக்கும் பெருமை சேர்த்துப்,
பெரும் புகழ் எய்தி விட்ட,
சீருக்குங் கவிதை பாடிச்,
சிந்தையில் உன்னை வைத்தோம்!

தாய், சகோதரன்,
சகோதரி, மைத்துனன்.

மணியகாரன் வீதி.

[430]


## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

## ரம்ழான் வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் ரம்ழான் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்.

★ புதிய பழைய தமிழ், ஆங்கில திரைப்படங்களை பதிவு செய்யவும், வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்.
★ புதிய பழைய திரைப்பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்.

**வீடியோ கொனி**
**No.1, சிவன் பண்ணை வீதி,**
(வைத்தீஸ்வரா சந்தி)
**யாழ்ப்பாணம்.**

(10839)

## நெசவாளர் தேவை

மின்தறி ஆலைக்கு நெசவாளர் தேவை.

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யப்பான் மின் தறிகளில் வேலை செய்ய நெசவாளர் தேவை.

உற்பத்தித் திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் நெசவாலைக்கு நேரில் வரவும்.

— சபாபதிப்பிள்ளை இரங்கநாதன்
குத்தகைக்காரர்.

(438)

## DIPLOMA IN NURSING

**தாதிப் பயிற்சி நெறி - டிப்ளோமா**
**புதிய பயிற்சி நெறி (11ம் பிரிவு)**
**ஆரம்பம்:- 10- 05- 1989**

★ பிரபல ஆசிரியர் குழு
★ விசேஷ பார்மஸி வகுப்புக்கள்
★ இலவச ஆங்கில வகுப்புக்கள்

உங்கள் பதிவுகட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, சென். பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,

(C/2506)


## ஈராண்டு நினைவஞ்சலி



படைப்பு:
1961 - 01 - 20

அழிப்பு:
1987 - 05 - 07

செல்வன்
**அமிர்தலிங்கம் - சற்குணராசா**

என் அன்புச் செல்வமே!
நீ மறைந்து ஈராண்டு சென்றாலும்
கண்ணில் நீர் வற்றவில்லை
காலமெல்லாம் அழுதாலும்
கவலையோ தாழாது
சொல்லிலே கண்ட உறுதி
செயலிலே கண்ட வீரம்!
செல்வனாய் இருந்து செய்த
சீரிய பணிகள்!
எம்மை விட்டு என்றும் அகலா.
உன் ஆத்மா சாந்திகொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
அன்னை, தந்தை, சகோதரர்கள்,
அத்தான், சகோதரிகள், மருமக்கள்,
சுற்றத்தார்.

'யாவத்தை,
வதிரி,
அல்வாய்.

(437)

## முதலாண்டு சிரார்த்த நினைவஞ்சலி





**திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்**

தோற்றம்: 1921-05-24
மறைவு: 1988-04-19

திதி: சித்திரை மாதம்
பூர்வ பக்கத் திருதிசை
7-5-1989 ஞாயிற்றுக்கிழமை

**திரு. சுப்பிரமணியம் சச்சிதானந்தன்**
(பெரியதம்பி)

தோற்றம்: 1945-10-22
அகால மறைவு: 1987-10-21
(தீபாவளி தினம்)

திதி: ஐப்பசி மாதம்
அபரபக்கச் சதுர்த்தி

எம் இனிய உள்ளங்களே நீவிர் எம்மைவிட்டு அகன்றாலும் நாம் உம் நினைவால் வருந்தி வாழ்கின்றோம்.

- குடும்பத்தினரும், உறவினரும்.

[10832]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

கள்ளுண்ணுப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

**பொருள்:**

ஒருவன் தான் கள் உண்ணுதபோது கள்ளுண்டு மயங்கினவனைக் காணுமிடத்தில் உண்டு மயங்குவதால் வரும் சோர்வை நினைக்கமாட்டானோ?


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
07 - 05 - 1989 த. பெ. இல: 23


## கல்வித் தேவைகள்

பிரச்சினைகளைச் சவாலாகக் கருதி, அவற்றை எதிர்கொண்டு, தக்க தீர்வுகளைக் கண்டு, துணிந்து செயற்பட வேண்டும். அவ்வாறு துணிந்து செயற்படுவதன் மூலம் தான் வாழ்க்கையில் வெற்றிகாண முடியும்.

இவ்வாறு கல்லூரி அதிபர் ஒருவர் பரிசளிப்பு விழாவில் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் நிறுவுனர்தினம், வைரவிழா, வருடாந்த பரிசளிப்பு ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் அண்மையில் ஒன்றாக, முக்கூட்டு விழாவாக நடைபெற்றன. அதற்குத் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் மேற்கண்ட கருத்தை முன் வைத்தார்.

பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு மனத்துணிச்சல் அவசியமானது என்பதை அவர், இப்பகுதி ஆசிரியர்களுக்குப் பொருத்திப் பேசினார்.

கடந்த பத்தாண்டு கால நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்ப் பகுதி மாணவர்கள். அந்த மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டிய சிக்கல் நிறைந்ததும், சிரமம் மிகுந்ததுமான பொறுப்பு இப்பகுதி ஆசிரியர்களிடையே உண்டு. அந்தப் பொறுப்பை அவர்கள் சிறப்புறச் செய்வதினாலேயே மாணவர்கள் தேர்வுகளில் சிறந்த பெறுபேற்றைப் பெறுகிறார்கள்— என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்ப்பகுதிகளில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளால் இப்பகுதி மாணவர்கள் பெருமளவில் பாதிப்படைந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்களது கல்வி நிலை பாதிப்புற்றுள்ளது என்பதும் உண்மை. இவ்விடயங்களை, இப்பத்தியில் அடிக்கடி எடுத்துரைத்துள்ளோம்.

இத்தகைய பாதிப்புற்ற நிலையிலும், எமது மாணவர்களின் கெட்டித்தனம் இன்னும் மறைந்து போகவில்லை என்பது அதிஷ்டவசமானது: மகிழ்ச்சிக்கு உரியது அந்த மகிழ்ச்சிக்குரிய பெருமை ஆசிரியர்களை மட்டும் சாராது.

மாணவர்கள், பெற்றோர்களின் மன உறுதியும், கல்வி பெறுவதில் உள்ள அக்கறையும் தமிழ் மாணவர்களின் கெட்டித்தனம், திறமை, பேணப்படுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை மறந்துவிடல் ஆகாது.

தமது பிள்ளைகளுக்கு எப்படியாவது, என்ன கஷ்டமுற்றாவது, கல்வி அறிவைத் தேடிக் கொடுத்துவிட வேண்டும் என்பதில் தமிழ்ப் பெற்றோருக்கு உள்ள ஆர்வமும் அக்கறையும் சிறிதும் குறைந்துவிடவில்லை. புறச்சூழ்நிலைகள் பாதகமாக இருப்பினும், பிள்ளைகளின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணமே பெற்றோர்களில் பெரும்பாலோரிடம் மேலோங்கி நிற்கிறது. ஆர்வமும் அக்கறையும் பல மடங்கு அதிகரித்துள்ளன என்று கூடச் சொல்லலாம்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் நிலைமை சற்று வேறுதான். அரசியல் சூழ்நிலைகள் காரணமாக, மாணவர்களில் ஒரு பகுதியினர் கல்வியில் முற்றாக நாட்டங்கொள்ளாது வேறு துறைகளுக்குக் கவரப்பட்டிருக்கிறார்கள்.

சிலர் படிப்பைக் கெடுத்துக் கொண்டு அத்துறைகளை நாடினார்கள் என்பது கவலைக்குரியது தான். உயர்தர வகுப்புவரை கற்றுவிட்டு மேற்கொண்டு எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருந்த பெரும் எண்ணிக்கையினர் அவ்வழி சென்றமை காலத்தின் தேவையாகி விட்டது.

எப்படியாயினும், தமிழ் மாணவர்களில் மிக அதிக சத வீதத்தினர் கல்வியில் அக்கறை உள்ளவர்களாகவும், நாட்டம் உள்ளவர்களுமாகவே இருக்கின்றனர். கல்வி அறிவின் அவசியத்தை அதில் திறமை காட்ட வேண்டியதன் தேவையை மாணவர்கள் உணர்ந்தவராக இருக்கிறார்கள். அந்த நிலைக்கு உந்து சக்தியாக விளங்குபவர்கள் முதலில் பெற்றோரே; அடுத்துத் தான் ஆசிரியர்கள்.

உண்மையைச் சொல்வதானால், ஆசிரியர்களில் குறிப்பிட்ட சத வீதத்தினர் பாடசாலைகளில் மாணவருக்கு முழு அளவில் பாடங்களைப் போதிப்பதில்லை. 'ரியூட்டரிகளில்' பாட போதனை நடத்தி மேலதிக ஊதியத்தைப் பெறுவதிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள். பாடசாலைச் சம்பளம் போதாமையினால், 'ரியூசன்' கொடுக்காமல் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது என்று அவர்களில் பலரும் வாய்திறந்து ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இதனால் இப்போது 'ரியூஷனும்', 'ரியூட்டரியும்' கல்வி முறையில் இன்றியமையாதனவாகிவிட்டன. அவை இரண்டும் இல்லாமல் மாணவர்கள் பரீட்சைகளில் தேற முடியாது, சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியாது என்ற நிலைப்பாடு ஸ்திரமாகி, இறுகிவிட்டது.

இதனால் இலவசக் கல்வித் திட்டம் முழுப்பயனையும் தரவில்லை என்றே கூறவேண்டி உள்ளது. வசதி குறைந்த ஏழைப் பெற்றோரால் 'ரியூஷனுக்கும்', 'ரியூட்டரிக்கும்' தமது பிள்ளைகளை அனுப்ப முடிவதில்லை. அதனால் அவர்களால் பரீட்சைகளில் தேற முடிவதில்லை!

இந்த நிலை நீக்கப்பட வேண்டும். தாம் பெறும் வேதனத்துக்காவது மாணவருக்கு உரிய அளவில் கல்வி புகட்ட வேண்டும் என்ற மனச்சாட்சி எல்லா ஆசிரியர்களிடமும் வளர வேண்டும்.

ஆசிரியர் சேவையின் சிறப்பையும், மகத்துவத்தையும் பேணும் விதத்தில் அரசும் அவர்களது வசதிக் குறைகளைப் போக்க வேண்டும்.

எதிர்காலச் சந்ததியின் நன்மைகருதி, நலன் கருதி இவை இரண்டும் இன்றைய சமூகத் தேவைகளாகும்.

✯ ரஷ்யாவுடன் பேச்சா?

## நேட்டோ நாடுகள் மத்தியில் அதிகரிக்கும் கருத்து வேறுபாடு

வாஷிங்டன், மே 6

ஐரோப்பாவில் இருந்து குறுகிய தூர அணு ஆயுதங்களைக் குறைப்பது சம்பந்தமான பேச்சுக்களை சோவியத் யூனியனுடன் நடத்தமுடியாது என்று அமெரிக்கா அறிவித்து விட்டது.

நேட்டோ இராணுவ அமைப்பு நாடுகளில் ஒன்றான மேற்கு ஜேர்மன், சோவியத் யூனியனுடன் இது தொடர்பாக பேச்சுக்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது.

நேட்டோ அமைப்பில் அமெரிக்காவும் பிரிட்டனும் அங்கம் வகிக்கின்றன.

மேற்கு ஜேர்மனின் நிலையை பிரிட்டன் ஏற்கனவே எதிர்த்து உள்ளது.

இதனால் நேட்டோ நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதனைத் தவிர்க்கும் முயற்சியாக பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் பொன் சென்று மேற்கு ஜேர்மன் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தினார். அவை தோல்வியில் முடிந்தது.

இப்போது அமெரிக்காவும் மேற்கு ஜேர்மனியின் நிலைப்பாட்டுக்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்து உள்ளது.

மரபு வழி ஆயுதங்களைக் குறைத்தது காரணமாக வார்ஸோ நாடுகளிலும் பார்க்க நேட்டோ நாடுகள் பலவீனமடைந்துள்ளன.

இதனைச் சமன்சீர்படுத்துவதற்கு முன்னர் குறுகிய தூர அணு ஆயுதங்களைக் குறைப்பது சம்பந்தமான பேச்சுக்களைச்சோவியத்துடன் நடத்த முடியாது என்று அமெரிக்கா காரணம் காட்டியுள்ளது. (எ)

### நமீபியா நிலை

கேப்டவுண், மே. 6

நமீபியாவில் எல்லைப்புறரோந்துகளை தென் ஆபிரிக்க அரசுப்படைகள் மீண்டும் ஆரம்பித்தன.

நமீபியாவுக்குள் பிரவேசித்த சுவப்போ இயக்கப் போராளிகள் மீண்டும் அங்கோலா திரும்ப உதவுமுகமாக தென் ஆபிரிக்கா 60 மணித்தியால யுத்த நிறுத்தம் ஒன்றை எல்லைப்புறத்தில் கடைப்பிடித்தது. [எ]

## யாசீர் அராபாத்தின் பேச்சுக்கு அமெரிக்கா வரவேற்பு

இஸ்ரவேலை அழிக்கும் திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் வெளியிட்ட அறிவிப்பை அமெரிக்கா வரவேற்று உள்ளது. அரபாத் இந்த அறிவிப்பை பாரீஸில் வைத்து டெலிவிஷன் உரை ஒன்றில் வெளியிட்டார்.

ஆனால் இஸ்ரவேலிய பிரதமர் ஷாமிர் அரபாத் பேச்சு பற்றி கருத்து வெளியிடுகையில்,

தனது நலனுக்கு பயன்படக்கூடிய எதையும் சொல்ல அரபாத் தயங்க மாட்டார் என்று தெரிவித்தார். (எ)

## ஜெனிவா மாநாட்டிற்கு வரும் பலஸ்தீன இயக்கப் பிரச்சினை

ஜெனிவா, மே 6

ஐ. நா. அமைப்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்தக் கூட்டம் வருகிற திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

ஸ்தாபனத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து கொள்வதற்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் அனுப்பியுள்ள விண்ணப்பம் இந்த மாநாட்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த விண்ணப்பத்தை நெருக்குதல்களுக்குப் பயந்து வாபஸ் வாங்கப் போவது இல்லை என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் ஸ்தாபனத்தில் சேர்க்கப்படுவதை கடைசி வரை எதிர்க்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. (எ)

### சோவியத் கோரிக்கை

மாஸ்கோ, மே 6

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க ஐ. நா. ஸ்தாபனம் விசேட அமைப்பு ஒன்றை நிறுவ வேண்டும் என்று சோவியத் யூனியன் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ. நா. பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வாநட்ஸே முன்கண்ட கோரிக்கையை விடுத்திருக்கிறார். (எ)

✯ அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய

## மேற்கு நாட்டு பிரசைகளை கொல்ல பி. எல். ஓ. வுக்கு ஈரான் அழைப்பு!

### மரணமடையும் ஓர் அரபுக்கு ஐந்து பேர் வீதம்

லண்டன், மே 6

அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் பிரசைகளைக் கொல்லும்படி பலஸ்தீன மக்களுக்கு ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் ரஸ்வன்ஜானி நேற்று பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

அவர் தனது வேண்டுகோளில்— "பலஸ்தீனப் பிரச்சினையில் இஸ்ரவேலின் போக்கை மாற்றுவதற்கு இந்தப் பழிவாங்கல் நடவடிக்கையில் பலஸ்தீனியர் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

கொல்லப்படும் ஒவ்வொரு பலஸ்தீனியருக்கும் 5 அமெரிக்கர், 5 பிரிட்டிஷ்காரர், 5 பிரெஞ்சுக்காரர் ஆகியோரை பலஸ்தீனியர் கொல்லவேண் வேண்டும்.

அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஆகிய நாடுகளின் தொழிற்சாலைகளைக் குண்டு வைத்துத் தகர்க்க வேண்டும்.

இந்த நாடுகளின் விமானங்களை கடத்த வேண்டும்"— என்று கோரியிருக்கின்றார்.

ஈரானின் இந்த வேண்டுகோளை மேற்கு நாடுகள் பலமாகக் கண்டித்துள்ளன.

ஈரானின் அறைகூவலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரெஞ்சு அரசு நேற்றுக் கண்டித்தது.

ஈரான் தனது மனிதாபிமானமற்ற போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருப்பதையே இந்த வேண்டுகோள் காட்டுகிறது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும், இஸ்ரவேலும் கண்டித்துள்ளன.

### அமைச்சர் மரணம்

ஈராக் பாதுகாப்பு அமைச்சர் ஹெலிக்கொப்டர் விபத்து ஒன்றில் மரணமடைந்து விட்டார் என்று பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது. (எ)

### கே. ஜி. பி. உளவு நிறுவனம்

சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி. இனி தனது முக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை சோவியத் மக்களுக்கு தெரிவிக்கப்போவதாக அறிவித்து உள்ளது.

## சீனவில் மாணவர் கிளர்ச்சி மீண்டும் ஆரம்பமானது!

பீகிங், மே 6

சீனவில் மீண்டும் மாணவர் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்வியாழன்காலை பீகிங் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறி ஊர்வலமாக ரியான மன் சதுக்கம் நோக்கிச் சென்றனர்.

கூடுதல் ஜனநாயகம் கோரி கோஷம் எழுப்பிய வண்ணம் அவர்கள் சென்றனர்.

இதே வேளை அரசுக்குச் சாதகமான மாணவர் அமைப்புடன் சீன அரசு பேச்சுக்களை நடத்தி வருகிறது. [எ]

## ஈத் முபாரக் புகட்டும் இனிய பாடங்கள்

மௌலவி கே. பீ. நஸார்தீன் (ரஸாலி)

ஓ'ரு மாத இடைவெளிக்குப் பின் இஸ்லாமியர்கள் பகலில் உணவருந்தும் ஒரு சந்தர்ப்பத்தின் முதலாம் நாளே நோன்புப் பெருநாளாகும்.

உணவிருந்தும் அருந்தாது, நீரிருந்தும் பருகாது, தனது ஆசைகளையும், இச்சைகளையும் அடக்கி இறைவனை நினைவுகூரும் வகையில் மனிதன் ஒருமாத காலத்தைத் தியானத்திலும் நல்ல செயல்கள் செய்வதிலும் பயன் படுத்திக் கொண்டான்.

அவன் நோற்ற நோன்புகளின் பிரதிபலனில் ஒரு சிறு அம்சமே புனித நோன்புப் பெருநாள், ரமழான் காலங்களில் அதிகாலையில் எழுந்து ஸஹர் செய்து, மீண்டும் மாலையாகும் வரை சூரிய அஸ்தமன நேரம்வரையும் தன் வயிற்றினுள் எதனையும் செல்லவிடாது, தனது ஆசைகளுக்கு அடிபணியாது, இச்சைகளை அடக்கி இறைவனை வணங்கிக் கொண்டிருந்த மனிதனுக்கு இத்தனை விலங்குகளையும் உடைத்து உண்ணவும், பருகவும், ஏனைய வழமையான (மார்க்கத்தில் விலக்கப்பட்ட செயல்களைத்தவிர) செயல்களைச் செய்யவும் இப்பெருநாள் இம்மனிதனுக்கு வழி வகுக்கின்றது. இந்நந் நாளில் நோன்பு வைப்பதை விலக்கப்பட்டுள்ளது.

இந்நாள் முஸ்லிம்களுக்கு நல்ல செயல்கள் செய்வதை வலியுறுத்திக் கூறுகின்றது. நம் சமூகத்தைப் பொறுத்த மட்டில் இந்நாளைத் தான் எல்லாத் தீமைகளையும்செய்ய அனுமதிக்கப்பட்ட நாள் எனக்கருதி எண்ணிலடங்காத தீமைகளைச் செய்கின்றனர்.

இந்நிலை மாறி பெருநாட்களில் நல்ல பல செயல்களைச் செய்யத் தூண்டுவதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இப்பெருநாளை நாம் மது அருந்துவதிலும், சூதாடுவதிலும், வீணான விளையாட்டுக்களிலும், வீணான பிரச்சினைகளிலும் பகைமையை ஏற்படுத்துவதிலும் கழிப்போமானால்பெருநாளின் உயரிய பயனை இழந்து விடுவோம்.

### நினைவு கூரல்

இவ்வகையில் இப்பெருநாட்களில் நாம் செய்யவேண்டிய பல நல்ல விடயங்களை நினைவு கூருவது நன்று எனக் கருதுகின்றேன்.

முதலில் இப்பெருநாட்களில் அல்லாஹ்வின் அமரர்களான மலக்குமார்களின் வருகை அவர்களின் அருட்கள், அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிதல் போன்ற விடயங்களையும், சந்தி சந்தியாக அவ்வமரர்கள் நின்று கொண்டு பள்ளிவாசல்களுக்குச் செல்வோர்களையும் அவர்களுக்குரிய கூலிகளையும் அவர்களின் ஏடுகளில் பதிவு செய்து கொள்கின்றனர்.

எனவே இப்பெரு நாள் தினத்தில் மலக்குகளின் அருளுக்கு அருகதையுடையவர்களாக நாம் மாற வேண்டுமாயின் இப்பெருநாள் தினத்தில் நல்ல செயல்களைப் புரிவது அவசியமும் அவசரமுமாகும்.

இப்பெரு நாள் தினத்தில் நாம் பள்ளி வாசலுக்கு புனிதமிக்கத் தொழுகையை நிறைவேற்றுவதற்குச் செல்லும் போது ஒரு பாதையினாலும் வரும்போது வேறொரு பாதையினாலும் வருதல் வேண்டும்.

ஏனெனில் நபிகள் [ஸல்] அவர்கள் ஒருமுறை பெருநாள் தொழுகைக்குச் சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஓர் ஏழைச் சிறுவன் ஏனைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் அவ்வேளையில் அச்சிறுவன் மட்டும் கவலை தோய்ந்த முகத்துடன் கண்கள் கலங்கிய வண்ணம் அழுது கொண்டிருந்தான். இதனை அவதானித்த நபி (ஸல்) அவர்கள் அச்சிறுவனை அணுகி ஏ! குழந்தாய் ஏன் அழுகின்றாய் எனக் கருணையோடு விசாரித்தனர். அதற்கு அச்சிறுவனோ, நானோ ஓர் அனாதை எனக்கோ இப்பெருநாளைக் கொண்டாட வசதியில்லை. என்னைப் போன்ற சிறுவர்களெல்லாம் மகிழ்ச்சியில் விளையாடும் இவ்வேளை எனக்கும் பெற்றோர்கள் இருப்பின் நான் இந்நிலையில் இருப்பேனா என மனவிசனத்தோடு கூறினான்.

உடனே நபி [ஸல்] அவர்கள் அச்சிறுவனை தமது மார்போடு அணைத்து முத்தமிட்டு தம் அருமை மனைவி ஆயிஷா [ரலி] அவர்களிடம் அழைத்துச் சென்று இது நமது குழந்தை இக்குழந்தையை நீராட்டிப் புத்தாடை அணிவித்து மகிழ வைக்கவும் எனக் கூறினார். பின்பு பள்ளிவாசலை நோக்கிச் சென்ற நபி [ஸல்] அவர்கள் அங்கே ஒரு சிறு சொற்பொழிவாற்றினார்கள்.

அச்சொற்பொழிவில் அவர்கள் கூறியதாவது, எனதருமைத் தோழர்களே! நீங்கள் பெருநாள் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்கு வரும்போது ஒரு பாதையாலும், போகும் போது வேறொரு பாதையாலும் செல்லுங்கள். ஏனெ



னில் உங்களில் ஏழைகளும், அனாதைகளும் வீதிகளில் அனாதரவற்ற நிலையில் கவலையோடிருப்பர். எனவே அவர்களை உங்கள் வீடுகளுக்கு அழைத்துச்சென்று கௌரவப் படுத்துங்கள் எனக் கூறினார்கள்.

மேலும் இப்பெருநாட்களில் அதிகமதிகம் தர்மம் (நன்கொடை) செய்வதும், ஏழைகளின் வீடு தேடிச் சென்று அவர்களுக்கு உதவுவதும் சொந்தக்காரர்கள், பெற்றோர்கள் இனபந்துக்கள் போன்றோரின் வீடுகளுக்குச் சென்று அவர்களோடு உறவாடுவதும், இஸ்லாமியச் சகோதரர்களான எமது பகைவர்கள் மனத்தாங்கல்களால் எம்மை வெறுத்திருப்போர் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் கைகுலாவி, சலாம்கூறி மகிழ்விப்பதும் எமது பெற்றோர்கள் மரணித்தவர்களாயின் அவர்களின் அடக்கஸ் தலங்களுக்குச் சென்று அவர்களுக்காக நாம் பிரார்த்தனை புரிவது போன்ற நல்ல செயல்களிலும், திக்ரு, ஸலவாத், துஆப் போன்ற இறை ஞாபகத்தை ஏற்படுத்தும் நற்கிரியைகளைச் செய்து இப்பெருநாளைக் கௌரவிப்பதோடு, இறை திருப்தியை மேலும் என்னென்ன செயல்களில் நாம் தேடிக்கொள்ள முடியுமோ அச்செயல்களை அதிகமதிகம் செய்து வருதல் இத்தகு நல்ல பண்பாடுகளை நாம் இப்பெருநாளிலும், இனிவரும் பெருநாட்களிலும் பின்பற்றுவதோடு அனுதினமும் இப்பழக்க வழக்கம் எம்மிடம் உண்டாக ஆவன செய்வோம். ★

## கோண்டாவில், இணுவில், யாழ். பகுதிகளில் கோமாரி தடுப்பூசி

யாழ் மிருக வைத்தியப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்ட கோமாரி தடுப்பு ஊசி போடுதல் நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை கோண்டாவில் ஸ்ரேசன், அரசடிப் பிள்ளையார் கோயில், செல்வநாயகம் வீதி இடைக்காடு ஒழுங்கையிலும் —

இதே நேரத்தில் இணுவிலில் தம்பி கராஜ் ஒழுங்கை, மஞ்சத்தடி, அண்ணமார் கோயிலடி, சிவகாமி அம்மன் கோயிலடியிலும்—

9 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணி முதல் 8.30 மணிவரை [illegible] உள்ள தியேட்டர் ஒழுங்கை, அண்ணா பாம்லேன், யாழ்ப்பாணக் கல்லூரிக் கமம், அன்னங்கையிலும்—

யாழ்ப்பாணத்தில் காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 ஆம் குறுக்குத்தெரு, கொய்யாத் தோட்டம் புது ரோட் சனசமூக நிலையம், ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும்—

காலை 8.30 மணி முதல் 9.30 மணிவரை 4 ஆம் குறுக்குத் தெரு, சாப்பல் வீதி, கச்சேரி கிழக்கு ஒழுங்கை ஆகிய இடங்களிலும்— நடைபெறும். (இ)

## விபரம் திரட்டல் முடிவுற்றது

யாழ்ப்பாணம் மே 7

உடுவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் சேதம் அடைந்த வீடுகள், நிறுவனங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான வேலைகள் மூன்று மாதங்களுக்கு முன்னரே முடிவடைந்துவிட்டன.

இப்போது அது சம்பந்தமான வேலை எதுவும் நடைபெற வில்லை என்று உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாகி உதவியாளர் திரு. ஜே. எஸ். அலெக்ஸாண்டர் தெரிவித்தார். (இ)

சமய சந்நிதிகளில்

## சித்தன்கேணியில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 7

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவிலில் மகா கும்பாபிஷேகம் 10 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக இருப்பார்.

நல்லை ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார்கள்.

துர்க்கா துரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார். (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை யாழ்ப்பாணம்.


# உதயன்

07 - 05 - 1989 ஞாயிற்றுக்கிழமை


சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.



## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் ( Job Categories) உயர் தொழில் முதல் சிறு தொழில்வரை, 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும். கட்டணம் எதுவுமில்லை. நீங்களே உங்கள் வெளிநாட்டுத் தொழிலதிபருடன் தொடர்பு கொண்டு உங்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக் கொள்ள முதலில் சுயவிலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**Foreign Assignments,**
**Chunnakam.**

(441)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

**உயர்திரு. கனகரட்ணம் பரராஜசிங்கம்**
B.A Hons) S.L.A.S.
(முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர்—குச்சவெளி)

**அவனியில்:** 22 - 11 - 1943
**அவனடியில்:** 07 - 04 - 1989

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தீர்
பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காரிருளில் ஒளி தந்தீர் கடமை முடித்தீர்
காலமெல்லாம் உம் நினைவுடன் காத்திருப்போம்
போற்றிடுவோம் உமது புகழை
நீர் சென்ற இடம் எதுவோ?
சிந்தித்துப்பார்க்க முடியவில்லை ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

✶ குறிப்பு:
நாளை 08-05-89 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும் மதிய போசனத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, மகன்மார்,
சகோதரங்கள்.

இல- 15
ஆடிய பாதம் வீதி,
கல்வியங்காடு.

(C/2460)

கிளிநொச்சிப் பயணிகள்

## வெள்ளி இரவை தேவாலயத்தில் கழித்தனர்

சாவகச்சேரி, மே 7

கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் பகுதியை இந்திய அமைதிப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் முயற்சியில் மாலை ஆறு மணி வரை ஈடுபட்டனர்.

வீதிகளால் சென்றவர்கள் பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர். மட்டுவில் மகாவித்தியாலயச் சந்தியை அடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் மரணம் அடைந்தார் எனக் கூறப்பட்டது. ஆனால் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

வீதிகள், வீடுகள் யாவும் சோதனையிடப்பட்டன, தடுத்து வைக்கப்பட்டவர்கள் மாலை ஆறு மணியளவிலேயே விடுவிக்கப்பட்டனர்.

கண்டி வீதியில் நுணாவிலில் கண்ணிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதனை அடுத்து பஸ் போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டன.

போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட பஸ்கள் மிருசுவில் தேவாலயத்தில் இரவு முழுவதும் தரித்து நின்று நேற்றுச் சனிக்கிழமை காலை பயணத்தைத் தொடர்ந்தன. இந்த வகையில் சுமார் 500 பேர் தேவாலயத்தில் வெள்ளிக்கிழமை இரவைக் கழித்தனர்.

(அ-31-163)

### காட்டில் இரு சடலங்கள்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி இரணைமடு காட்டில் அழுகிய நிலையில் இரண்டு சடலங்கள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டன.

இந்தச் சடலங்கள் சிதம்பரம் சுந்தரம் (வயது 32) என்ற 5 பிள்ளைகளின் தந்தையினதும் அழகர் மகேஸ்வரி (வயது 28) என்ற மணமாகாதவரினதும் என்று அடையாளம் காணப்பட்டன.

மரண விசாரணையை கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு கே. திருலோகமூர்த்தி மேற்கொண்டார்.

முடிவில் நஞ்சருந்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஒ-76)

### நோன்புப் பெருநாள் உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம்,மே 7

முஸ்லிம் மக்களின் நோன்புப்பெருநாளை முன்னிட்டு சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுச் சாம்பியனை யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் விளையாடும்.

நாளை திங்கட்கிழமை ஆனையிறவு உப்பளம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகம் விளையாடும்.

நஸார் வீடியோ ஸ்தாபனத்தாரின் ஆதரவில்நடைபெறும் இப்போட்டிகள்யாவும் யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெறும். (க)

### முஸ்லிம்..,

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமைப்பாடுகளைத் தொடர்ந்து வரும் காலங்களில் மேலும் வலுப்படுத்துவோம்.

வட - கிழக்கு மாகாண அரசு தனது கொள்கை விளக்க உரையில் குறிப்பிட்டதுபோல முஸ்லிம் மக்களின் மத, கலை, கலாசார தனித்துவங்களைப் பேணுவதுடன், வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளையும் துரித கதியில் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்''- இப்படி அவர் தெரிவித்துள்ளார். [ஒ-3]


## தவறிவிட்டது

05-05-1989 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒலிம்பிக் குறூப் 29 ஸ்ரீ 6077 இலக்க மினி பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணி எமது பை (Bag) ஒன்றைத் தவறுதலாக மாறி எடுத்துச் சென்றுவிட்டார். அதில் பல பொருள்களுடன் 493182625 V இலக்க அடையாள அட்டையும் உள்ளது. கைமாறி எடுத்தவர் தயவு செய்து அப் பையை 'உதயன்' காரியாலயத்தில் உடன் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன்.

தகவல்:
திருமதி சண்முகநாதன்

[10853]



## இன்று ரூபவாஹினியில்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தான சங்காபிஷேக விழா
இன்று மாலை 5 - 30 மணிக்கு ரூபவாஹினி
சைவநீதி நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும்.

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்
கொழும்பு. (442)


### சடலம் ஒப்படைப்பு

வட்டக்கச்சி, மே 7

கிளிநொச்சி அரச மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இந்தியப் படையினர் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்றை ஒப்படைத்தனர்.

இறந்தவர் 154 ஆம் கட்டை செல்வபுரத்தைச் சேர்ந்த கண்ணன் என்றழைக்கப்படும் த. கோபாலகிருஷ்ணன் (வயது 22) என்ற கூலித் தொழிலாளி என்றும் கடந்த 4 ஆம் திகதி இவர் இந்தியப் படையினரால் அதே இடத்தில் வைத்துக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

(ஒ-163)

### இருவர் காயம்

கொழும்பு, மே 7

நேற்று கண்டி மாநகரசபை உறுப்பினர் எச். சில்வாவும் இன்னொருவரும் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.(ஒ-எ)

### இன்று

யாழ்ப்பாணம் மே 7

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன சைவ சித்தாந்த கலாசாலை ஆரம்பவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ் ஆரம்பவிழாவுக்குத் தலைமை வகிப்பார். [ச]

### தப்பியோடிய. .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அசம்பாவிதங்கள், சேதங்கள் குறித்து தகவல் எதுவுமில்லை.

இதற்கிடையில் அதே தினத்தில் செட்டிகுளம் இந்திய அமைதிப்படை முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து படையினரால் எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. ஷெல் பிரயோகமும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதலின் போது ஒரு பெண் (பொதுமக்களில் ஒருவர்) காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

(அ-164)

### யாழ். அரச அதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து மு. ப. 10. 15 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நடைபெற்றன.

சிதைக்கு சகோதரர் திரு. வை. மு. யோகேஸ்வரன் தீமூட்டினார். (ஒ-9)

### புலோப்பளை,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

29 கர்ப்பிணி), நா. பொன்னையா [வயது 73], எஸ். செல்லையா [வயது 53] ஆகியோர் பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பளை, செல்வபுரம் பகுதியில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பலர் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் இவர்களில் பெரும்பாலோர் அரச வைத்தியசாலைகளில் கடமைபுரிபவர்கள் எனவும் அறியப்படுகிறது. [ஒ-117]

வவுனியா சம்பவத்தில்

## பலியான நான்கு பேரும் அடையாளம் காணப்பட்டனர்

வவுனியா மே 7

கடந்த திங்கட்கிழமை வவுனியா அரசினர் பண்ணை இந்திய அமைதிப்படையின் காவலிலிருந்து தடுப்புக் கைதிகள் தப்பியோடிய வேளையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களின் போது பலியாகிய நான்கு இளைஞர்களினதும் மரணவிசாரணைகள் வவுனியா ஆஸ்பத்திரியில் நடைபெற்றன.

பின்னர் படையினர் நான்கு சடலங்களையும் பொறுப்பேற்று எடுத்துச் சென்றனர்.

இறந்தவர்கள் கணேசலிங்கம், செல்வம், தியாகராஜா, எஸ். பாலேந்திரன் என்று அடையாளம் காணப்பட்டது.

[ ஒ - 144 ]

### பிரிட்டிஷ் குழு இன்று வருகிறது

யாழ். நகருக்கு இன்று பிரிட்டிஷ் தூதுக்குழு ஒன்று மீண்டும் விஜயம் செய்ய உள்ளது.

பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளட்ஸ்ரன் தலைமையில் இந்தத் தூதுக்குழு இங்கு வர உள்ளது.

யாழ். நகரப் பகுதியைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டுத் திட்டங்களை மேற்கொள்ளவும், மற்றும் திட்டமிடல் மதிப்பீடுகளை மேற்கொள்ளவுமே இந்தக் குழு இங்கு வர உள்ளது. ( ஓ-9)

### மீசாலையில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த ஜவான் சாவகச்சேரி முகாமுக்கு எடுத்து வரப்பட்டு ஹெலிமூலம் கொண்டு செல்லப்பட்டார். [ஒ-௨]

### சுந்தரலிங்கம் பிஜியில்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. வி.ரி. சுந்தரலிங்கம் பிஜியில் நீதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முதலாம் தர மாவட்ட நீதிபதியாக இவர் கடமையாற்றுவதற்கு முன் குருநாகல், கொழும்பு, முல்லைத்தீவு, ஊர்காவற்றுறை திருகோணமலை ஆகிய இடங்களில் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் கடமை ஆற்றி இருந்தார். [இ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. பொன்னுத்துரை கனகரத்தினம்

திரு.பொன்னுத்துரை கனகரத்தினம் (Accountant. Satchithananda Schokman Pasupathy and Co. Jaffna.) 04.05.1989 இல் காலமானார். இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், நித்தியானந்தன் (Electronic Engineer U. K), யோகாம்பிகை, லிங்காம்பிகை ஆகியோரின் தந்தையும், பொன்னம்பலம் (Irrigation Office Kilinochchi), யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், பிரபாகரன், இந்திரா, சுதா, ஆனந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08-05-1989 திங்கட்கிழமை பழனித்துரை வளவு தலையாளி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பொ. பொன்னம்பலம்**

தலையாளி ஒழுங்கை,
நாச்சிமார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[440]

### திருமதி மாசிலாமணி மனோன்மணி

(ஐயனார் கோவிலடியைச் சேர்ந்தவர்)

ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி மாசிலாமணி மனோன்மணி காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாசிலாமணி (Custom's Officer) யின் அருமை மனைவியும், காலஞ்சென்ற துரையப்பா - நாகப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற வீரசிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 7-5-89 இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி ப. சண்முகலிங்கம்**

192, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

[10854]

சொலிட் பம்ப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 07—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது